- உபகாரசாலையின் பொறுப்பேற்று அரசு அலுவலகங்களில் பொதுமக்களுக்கு ஏற்படும் தேவைகளை பூர்த்தி செய்யவும், பிரச்சனைகளை தீர்த்துவைக்க முன்வந்துள்ள ஓய்வுபெற்ற துணை ஆட்சியர்கள் மயிலாடுதுறை திரு. எஸ்.மகாலிங்கம் மற்றும் திரு. இராம. சுப்ரமணியன் ஆகியோருக்கு.
- தட்டுப்பாடு ஏற்பட்டபோதெல்லாம் ஜோதிக்கு எண்ணெயும், தருமசாலைக்கு மளிகைப் பொருட்களையும் வழங்கி உதவிய பெருவணிகர் ஆர்.பழனிவேலு திருச்செம்பொன்பள்ளி அவர்களுக்கும்.
- கட்டுமானப் பணியில் ஈடுபட்ட கருவி மேஸ்திரி திரு. குருமூர்த்தி, கம்பி ஃபிட்டர், மின்சாரப் பணி செய்துதரும் மயிலாடுதுறை ஏஜெஎல். சிவராமன், மரவேலை செய்துதரும் நடராஜபிள்ளைசாவடி கார்த்தி ஆசாரி, சதீஷ் ஸ்தபதியார் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும்
- கடந்த மூன்று ஆண்டுகளாக ஜோதி நிலையத்தில் தங்கி, ஜோதியை காபந்து செய்து வழிபட்டு வரும் ஆயிரம் பிறை கண்ட முதியவர் பாலு ஐயா, அருள் மூதாட்டி பாலாம்பிகா அம்மையார் ஆகியோர் திருப்பாதங்களுக்கு.
- கட்டுமானப் பணியின் 3 ஆண்டுகள் முயற்சியில், நம்முடன் துணைநின்ற மூங்கில்தோட்டம் ஜெயச்சந்திரன், மென்பொறியாளர் பெங்களூரு ஆனந்தபாரதி, மயிலாடுதுறை குருபோட்டோ ஸ்டுடியோ குருமூர்த்தி, நம்மைக் கண்டித்து கணக்கினை ஒருங்காகப் பெற்று, இலவசமாகக் கணக்கு எழுதித்தரும் மயிலாடுதுறை ஈஸ்வரய்யா ஆகியோருக்கு.
- நன்னீராட்டு விழாவிற்கான முழு செலவையும் ஏற்றுக்கொண்டுள்ள கிடாரங்கொண்டான் ஊராட்சியைச் சேர்ந்த ஏழு கிராம மக்களின் திருப்பாதங்களுக்கு.
- வடலூர் கல்விபயிற்சி ஆராய்ச்சி நிறுவன ஆசிரியர்கள் கனகசபை அண்ணா, பழனிவேல் அண்ணா, அண்ணாமலை அண்ணா, மாணிக்கம் அண்ணா, விருத்தாசலம் கலியபெருமாள் அண்ணா மற்றும் சக மாணவர்களுக்கு.
- இச்சங்கத்தின் சட்ட ஆலோசகராக பொறுப்பேற்றுக்கொண்ட முதுபெரும் வழக்கறிஞர் தயவுதிரு. என்.கே. கிருஷ்ணமூர்த்தி அய்யா அவர்களுக்கு.
- இச்சங்கத்தின் தணிக்கை பொறுப்பினை ஏற்றுக்கொண்ட ஆடிட்டர் தயவுதிரு. சட்டநாதன் அய்யா அவர்களுக்கு.
- கருங்குழி ஊராட்சிமன்றத் தலைவர் கிஷோர் குமார் அவர்களுக்கு.

ஏதாவது விடுதல் இருப்பின் மன்னித்தருள்க. நமது கவனத்திற்கு கொண்டுவாருங்கள், திருக்குறள் வகுப்பு துவக்கவிழா அழைப்பிதழில் சேர்க்கப்படும்.

வளர்நிதி வழங்கவும், தங்களால் இயன்ற பொருளுதவி செய்யவும் தொண்டு செய்யவும் காத்திருப்போர் கீழ்க்கண்ட எண்ணை தொடர்புகொள்ளுங்கள். கருணையை வளர்ப்போம்.

தயவுடன்,
ஒருங்கிணைப்புச் செயலாளர், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்-தருமச்சாலை
கல்வி மற்றும் சமுதாய வளர்ச்சி அறக்கட்டளை (அரசு பதிவு பெற்றது)

**அனைத்து விவரங்களுக்கும் தொடர்புகொள்ள :**

**75981 03818**



அச்சுப்பணியில்... **சுவாமி** பிரிண்டர்ஸ், கச்சேரி சாலை, மயிலாடுதுறை. 94437 29896.

அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி !
தனிப்பெருங்கருணை ! அருட்பெருஞ்ஜோதி !



யாரே எனினும் இரங்குகின்றார்க்கு சீரே அளிக்கும் சிதம்பர சிவமே!

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்-தருமச்சாலை**
**கல்வி மற்றும் சமுதாய வளர்ச்சி அறக்கட்டளை** (அரசு பதிவு பெற்றது)

# ஜோதி நிலையம் (பிறையாறு சிதம்பர சுவாமிகள் தயா நிலையம்)

நடராஜபிள்ளைசாவடி, கிடாரங்கொண்டான் ஊராட்சி, தரங்கம்பாடி வட்டம்-609107
மயிலாடுதுறை மாவட்டம்,

## அறக்கட்டளையின் நோக்கங்கள்:

1. 1946-இல் சன்மார்க்க சான்றோர்களால் உருவாக்கப்பட்ட ஜோதி நிலையத்தைப் புதுப்பித்தல், வள்ளலார் வரலாற்றுடன் ஒன்றியுள்ள அவரின் நான்காவது சீடரான பிறையாறு சிதம்பர சுவாமிகளின் தொண்டினைப் போற்றி நாள்தோறும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவருக்கு உலகத்து உயிர்களின் நலன்கருதி சன்மார்க்க முறைப்படி வழிபாடு நடத்துவது.
2. சிறுவர்களிடையே நல்லொழுக்கம், கருணை இவற்றை வளர்க்கும் வகையில், பதினொரு வயது நிரம்பிய எழுதப்படிக்கத் தெரிந்த முப்பது சிறுவர்களைத் தேர்வு செய்து, மூன்று ஆண்டுகளுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் புதிய முறையில் 90 திருக்குறளில் உள்ள செம்பொருளை உணர்த்தி, அதனை அவர்களின் வாழ்வியல் ஆக்குதல். மேலும், அவர்களுக்கு அன்று பகல் உணவு, சிற்றுண்டி, சத்துமாவுக்கஞ்சி வழங்குதல். அவர்களில் தேவைப்படுவோர்க்குக் கல்வி உதவி வழங்குதல்.
3. தமிழ்நாடு அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த ஏதுவாக ஜோதி நிலையத்தில் தரமான மென்பொருள் நிறுவி, தரமான ஆசிரியர்களைக் கொண்டு தரமான பயிற்சி வழங்குதல்.
4. மாணவிகள்/பெண்களில் தேவைப்படுவோர்க்கு கணினிப் பயிற்சி/தையல் பயிற்சி/அளித்தல்.
5. இருபாலருக்கும் தட்டச்சுப் பயிற்சி அளித்தல் தட்டச்சுப் பள்ளி துவங்குதல் - தமிழ்நாடு அரசு நடத்தும் வேலை வாய்ப்பு தேர்வுகளுக்குத் தரமான பயிற்சி அளிக்கப்படும்.

   தீராத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தரமான சித்த மருத்துவமும், ஆங்கில மருத்துவமும், ஹோமியோ மருத்துவமும் தக்க மருத்துவர்களைக் கொண்டு வழங்குதல். நோயை நீக்கமுடியாத நிலையில், சரியான வழிகாட்டுதல் செய்வது மூலம் அவர்களுக்குத் துணை நிற்றல்.
6. சுயதொழில் செய்ய விரும்புவோர்க்கு வழி காட்டுதல், அரசு நடத்தும் பயிற்சி குறித்து அவ்வப்போது விழிப்புணர்வு ஏற்படுத்தி பயிற்சிகளில் கலந்து கொள்ளச் செய்து சுய தொழில் தொடங்க அரசின் மூலம் உதவி பெற்றுத் தருதல்.
7. பள்ளி கல்லூரி செல்லும் மாணவ, மாணவியர்களுக்குக் காலை உணவு காலை 8.00 மணி முதல் பள்ளி,கல்லூரி, செல்லும் நாட்களில் வழங்குதல்.
8. பசித்தோர்க்கு தர்மசாலையில் அன்றாடம் உணவு வழங்குதல்.
9. வேலை வாய்ப்பு குறித்த தகவல்களைத் தெரிவிக்கும் வேலை வாய்ப்பு தகவல் மையம் துவங்குதல்.
10. அரசுக்கு உதவி வேண்டி பொதுமக்கள் அனுப்பகூடிய விண்ணப்பங்கள் ஜோதி நிலையத்தில் தொடர்புடையவரின் தேவைக்கு ஏற்ப இலவசமாகத் தட்டச்சு செய்து கொடுக்கப்படும்.
11. இவ்வூராட்சிக்கு உட்பட்ட அனைத்து கிராம மக்களின் சமுதாய மற்றும் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் செய்து தர மேற்படி சங்கம் முயற்சி செய்யும். இச்சங்கத்திற்கும் ஜோதி நிலைய தர்ம சாலைக்கும் ஊர் மக்கள் அனைவரும் சாலை சம்பந்திகளாக இருந்து தங்களுடைய நல் உணர்வையும், உழைப்பையும் தரவேண்டும் எனக் கோரப்படுகிறது.
12. சமூகத் தொண்டுகள் அனைத்தும் இச்சங்கத்தில் உள்ள ஓய்வு பெற்ற மாவட்ட அலுவலர்களைக் கொண்ட உபகாரசாலையின் மூலம் செய்ய முயற்சிக்கப்படும்.

உயிரெலாம் ஒருமையில் நோக்குக ; செயிரெலாம் விடுக ;
உயிருள் யாம் ; எம்முள் உயிர்; உயிர்நலம் பரவுக என உரைத்த மெய்சிவமே!

13. கல்வி தொடர்பான தொண்டுகள் அனைத்தையும் முழுமையாகச் செய்வதற்கு ஏற்ப மூன்று கணினிகள் மற்றும் கணினி அச்சு இயந்திரம் இணையதளவசதியுடன் நிறுவப்படும்.

14. நன்னீராட்டு விழாவிற்குப் பிறகு இப்பணிகள் அனைத்தும் படிப்படியாக மேற்கொள்ளப்படும். அதன் முதற்படியாக, ஜூன் மாதம் 2022-ல் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் திருக்குறள் வகுப்பு துவங்கப்படும்.

## வேண்டுகோள்:

தங்கள் மனைவி மக்கள் பிறந்த நாள் அல்லது உறவினர்கள் நண்பர்கள் நினைவு நாளைக் குறிப்பிட்டு உணவு வழங்கப் பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பொதுமக்கள் கூறும் நாளில் ஏழைகளுக்குப் பசி நீக்கும் ஜீவகாருண்ய பணி மேற்கொள்ளப்படும். உணவு வழங்குபவர்களின் நலன் கருதி பிரார்த்தனை செய்து வாழ்த்துடன் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

இங்ஙனம்: தயவுடன்...
பொதுச் செயலாளர், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்-தருமச்சாலை
கல்வி மற்றும் சமுதாய வளர்ச்சி அறக்கட்டளை (அரசு பதிவு பெற்றது)

## நன்றி மலர்கள்:

- நாம் தளர்ந்போதெல்லாம் நம் தளர்வினை நீக்கி, அரவணைத்து இன்று வரை எவ்வளவு பொருள் வேண்டும் என்று கேட்டு, கொடுத்த அருட்தாய் மலேசிய மருத்துவர் செல்வமாதரசியார் அவர்களுக்கு.
- முதன் முதல் ஜோதி நிலையம் கட்ட திருப்பணிக்குழு அமைக்க நமக்கு வழிகாட்டி உதவிசெய்த முதுகலை ஆசிரியர் திரு. உமாசங்கர் அவர்களுக்கு.
- ஜோதி நிலையத்தைப் புதுப்பிக்க ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றித் தந்த மதிப்புமிகு கிடாரங்கொண்டான் ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் மற்றும் வணக்கத்திற்குரிய முன்னாள், இந்நாள் ஊராட்சி செயலர்கள், மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு .
- தீர்மானம் நிறைவேற்ற ஏதுவாக உண்மையான சான்று ஆவணங்களை வழங்கிய தொடர்புடைய அலுவலர்களுக்கு.
- திருக்குறள் வகுப்பிற்குத் தேவையான 90 குறட்பாக்களைக் கொண்ட பாடத்திட்டத்தை தயார் செய்து தர ஒப்புக்கொண்டுள்ள மயிலாடுதுறைத் திருக்குறள் பேரவைத் தலைவர் முனைவர் சிவசங்கரன், வகுப்பினை செம்மையாக நடத்த உதவிசெய்ய ஒப்புக்கொண்டுள்ள திருக்குறள் பேரவைச் செயலர் நல்லாசிரியர் இரா. செல்வக்குமார், கனவு ஆசிரியர் திரு. வீதி. முத்துக்கணியன், சம்பந்தம் மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு. சங்கர் ஆகியோருக்கு.
- கல்விச் செயல்பாடுகள், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி அளிக்க ஏதுவாக, மென்பொருள் வழங்கவும், பொதுநிர்வாகத்தை ஏற்று நடத்தவும் ஒப்புக்கொண்டு பொறுப்பேற்றுள்ள இச்சங்கத்தின இணைப் பொதுச் செயலாளர் அமெரிக்க மென்பொருள் பொறியாளர் திரு. பா.முரளி, நிறுவனர்: மேக்னா இண்டர்நேஷனல் பள்ளிகள், மயிலாடுதுறை & காரைக்கால்.
- சங்கத்தின் துணைப் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்று, மருத்துவ சேவைக்கு உதவி செய்ய முன்வந்துள்ள திருவெண்காடு, கருணை மருத்துவர் வள்ளல்நேசன் திரு. ஜெயராஜமூர்த்தி மற்றும் மாவட்ட சித்த மருத்துவ அலுவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற செம்பனார்கோயில் எஸ்.எம்.பி. மணிவாசகம் ஆகியோருக்கு.
- கல்விப் பணிகளுக்கான மென்பொருளை நிறுவுவதற்குத் தேவையான லேப்டாப்களில், இரண்டினை வழங்க ஒப்புக்கொண்டுள்ள தயவு உள்ளம் கொண்ட மாண்பமை பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. நிவேதா முருகன் அவர்களுக்கு.
- மேற்படி நோக்கத்திற்காக ஒரு லேப்டாப் வழங்க, ஒப்புக்கொண்டுள்ள ஆலங்காடு மிராசுதார் தயவுதிருவாளர் முருகன் அவர்களுக்கு.





- கட்டிடப் பணிகளில் தடை ஏற்பட்டபொழுதெல்லாம் திருப்பணிக்குழுச் செயலராகவும், செயற்குழு உறுப்பினர்களாகவும் இருந்து தடைநீக்கித் தந்த தயவுதிரு. தம்பி வெங்கடேசன் நடராஜப்பிள்ளைசாவடி இளைஞர்கள், ஊர்ப்பொதுமக்கள், பள்ளக்கொல்லை தயவுதிருவாளர் மனோகரன் ஆகியோருக்கு.
- ஜோதிநிலையம் கட்டத் துவங்கியதிலிருந்து காலையும் மாலையும் கட்டுமானத்திற்குத் தண்ணீர் ஊற்றிய திருமுருகன் (ஜோதி நிலையத்தை துவக்கியவர்களுள் ஒருவரான பெருமாள் படையாட்சி பேரன்).
- ஜோதி நிலையத்தின் அன்றாட நிர்வாகத்தை நடத்தித்தர ஒப்புக்கொண்டுள்ள எஸ்.எம்.பி. அருள்வாசகம் அவர்களுக்கு,
- முதன் முதலில் கட்டிடப்பணி துவக்க, எங்களை நம்பி 7 யூனிட் ஜல்லி, 7 யூனிட் மணல், 125 சிமெண்ட் மூட்டைகள், செங்கல் வாங்க பணம் தந்து துவக்கி வைத்த செம்பனார்கோயில் புருஷோத்தமன் நைனா, உதயசூரியன் குடும்பத்தினர், மங்கைநல்லூர் வி.எஸ்.ஆசியஜோதி, வி.எஸ்.வி.&கோ, பெரம்பூர் மாணவர் ராஜ்மோகன், செம்பனார்கோயிலில் உடற்பயிற்சி மையம் வைத்துள்ள ச.கோபி, சன்மார்க்க அன்பர் பாலவெளி ராஜமாணிக்கம் ஆகியோர்களுக்கு.
- நமக்கு நன்கொடையும் தந்து, பல்லாற்றானும் உதவிசெய்த திருவாளர் கார்த்தி தம்பதிகள், உரிமையாளர் லெட்சுமி ஏஜென்சீஸ் அவர்களுக்கு.
- நன்கொடை என்று கேட்டுச் சென்றபொழுது, உலகம் முழுவதுமிலிருந்து நன்கொடை வழங்கி உதவிய சன்மார்க்க அன்பர்களுக்கு, பொதுமக்களுக்கு (திருப்பணி வசூல் நடைபெற்றுக்கொண்டிருப்பதாலும், திருப்பணியும் தொடர்ந்து கொண்டிருப்பதாலும், புதிய நன்கொடையாளர்களையும் பட்டியலில் சேர்க்க வேண்டியிருப்பதாலும் நன்னீராட்டு முடிந்து திருக்குறள் வகுப்பு துவக்க விழாவிற்கு அனுப்பப்படும் அழைப்பிதழில் முழுமையான நன்கொடையாளர் பட்டியல் மற்றும் வரவு செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு இணைத்து அனுப்பப்படும்.
- நன்கொடை என்று கேட்டுச் சென்றபொழுது, பெரம்பூர் அரசுப் பள்ளியில் நம்மிடம் பயின்ற மாணாக்கர்கள் ரூபாய் ஒரு லட்சம் வரை வசூல் செய்து வழங்கினார்கள். இதற்காக முயற்சி செய்த நமது மாணவர்களுக்கும்.
- பல ஊர்களுக்கும் நம்மை அழைத்துச்சென்று நன்கொடை பெற்றுத்தந்த பொன்செய் கிராமத்தில் வசிக்கும் ஓய்வுபெற்ற கிராம நிர்வாக அலுவலர் குணசேகரன், பொன்செய் மருந்துக்கடை உரிமையாளர் திரு. பூமுருகன் அவர்களுக்கும்.
- ஜோதி நிலையம் மரவேலைக்காக வேப்பமரங்களைத் தானமாகப் பெற்று அறுத்து, மரவேலை செய்ய உதவிய நடராஜப்பிள்ளைசாவடி திருவாளர்கள் ராஜ், புருஷோத்தமன், பொன்செய் திருவாளர்கள் தனஞ்செயன், மார்கோ, சிவப்பிரகாசம் ஆகியோருக்கு.
- கட்டுமானப்பணியில் தன்னலமின்றி உதவிய பொறியாளர்கள் வி.ஆடியபாதம், டி.சுவாமிநாதன் பி.இ., த.பொகுட்டெழினி எம்.இ., ஆகியோருக்கு.
- தருமச்சாலை துவக்கியதிலிருந்து ரூபாய் மூவாயிரம் வழங்கிவரும் சிந்தனைச்சித்தர் எம்.ஜி.எல்.வேலாயுதம், இரண்டாயிரம் வழங்கிவரும் பேராசிரியர் நமச்சிவாயம், ரூபாய் ஆயிரம் வழங்கிவரும் திருவாளர்கள் முதுகலை ஆசிரியர் திரு. பாலசெங்குட்டுவனார், திருவாரூர் திரு. சண்முகம் (கல்வித்துறை கண்காணிப்பாளர் ஓய்வு), திருவாரூர் ஆசிரியை திருமதி கற்பகவள்ளி அவர்களுக்கும், எதிர்காலத்தில் புரவலராக இருந்து வளர்நிதி வழங்க ஒப்புக்கொண்டுள்ள மயிலாடுதுறை பாலாஜி சுவாமிநாதன், பாலசுப்ரமணியன் சரவணன், பன்னீர்செல்வம் பிஎஸ்என்எல் ஓய்வு, சீனிவாசபுரம் மருத்துவர் பாரதி, ஆண்டுதோறும் 300 கிலோ அரிசி வழங்க ஒப்புக்கொண்டுள்ள பெருஞ்சேரி பி.கே.வி. புஷ்பம் அம்மையார் (மிராசுதார்) ஆகியோருக்கு.